சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 13.11.2025
ம.சா.2–ரவிச்சந்திரன் S/o வெள்ளைக்கண்ணு
EA 3/23 in EP 3/21
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

என் சகோதரர் பழனியப்பன் என்ற நபர் இருக்கிறரா என்றால் இருக்கிறார். நான் தாக்கல்செய்திருக்கும் இந்த மனுவில் முதலாவது சாட்சியாக பழனியப்பன் தான் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். 2006ம் ஆண்டு சர்வே எண்.61/9B1, காரியேந்தல் பட்டி கிராமத்தில் உள்ளதை நானும் எனது தாயாரும், எனது சகோதரரும், மற்றொரு சகோதரரான சின்னையாவும், வீரன் என்பவருக்கு பதிவு கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். பழனியப்பன் ஏற்கனவே அவருடைய சாட்சியத்தில் பூர்விக சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டு, தாயாருக்கும் சகோதரருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்தை தான் வீரன் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்று ஒப்புகொண்டுள்ளார் என்றால் சரிதான். ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்ட சொத்தை பொறுத்துதான், இந்த மனுவின் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்கனவே கிரைய ஒப்பந்தம் போடப்பட்டு அது தீர்ப்பான நிலையில் பத்திர பதிவு செய்ய நிறைவேற்று மனு தாக்கல் செய்து பத்திரபதிவு முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. எங்களுக்குள் இன்னும் பாகம் பிரிக்கப்படவில்லை. பத்திரபதிவு முடிந்துவிட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் வெளிமாநிலத்தில் கேரளாவில் பணியாற்றிவந்ததால் எனக்கு தெரியாது. நான் வெளிமாநிலத்தில் வேலை செய்த காலகட்டத்தில் என் குடும்பத்துடன் தொடர்பு இருந்ததா என்றால் இருந்தது. எனக்கு எல்லாவிபரமும் தெரியும் என்றால் சரியல்ல. ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் O.S 216/2011 என்ற ஏற்றுதல் ஆற்றுகை பரிகாரத்திற்கான வழக்கு தாக்கல் செய்து அது தீர்ப்பாகிய நிலையில் நிறைவேறறு மனுதாக்கல் செய்து பத்திர பதிவு செய்யப்பட்டு, தற்போது EP

No. 3/23 ஆனது சொத்து சுவாதீனத்தை எடுப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எல்லாம் தெரிந்த நிலையில் தற்போது சொத்து பாகம் பிரிக்கப்படவில்லை என்று தெரியாது என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.மேற்படி வீரனுக்கு விற்ற சொத்தை பொறுத்து கிரையம் பாகம் பிரிக்கப்படாத சொத்தை விற்பனை செய்தது செல்லாது என்று அறிவிக்ககோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. என்னுடைய மனுவில் வீரனுக்கு விற்பபனை செய்யப்பட்டதாக சொல்லப்படும் சொத்து என் அப்பா காலத்தில் பாகம் பிரிக்கப்பட்ட சொத்து என்று சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. அப்போது வீரனுக்கு விற்பனை செய்யப்பட்ட காலகட்டத்தில் என் அப்பாவிற்கும் எங்களுக்கும் இடையே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.அப்பாவிற்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையே தான் பாகம் பிரிக்கப்பட்டது எங்களுக்குள் பிரிக்கப்படவிலலை. அவ்வாறு என் அப்பாவிற்கும் அவரது சகோதரர்களுக்க்ம இடையே பாகபிரிவினையில் கிடைக்கப்பட்ட சொத்து என் அப்பாவிற்கு பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து தான் வீரனுக்கு கிரையம் முடிக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவ்வாறு என் அப்பா பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்பதால் தான் வீரனுக்கு விற்கப்பட்ட சொத்தை நானும், என் தாயாரும், சகோதரரும் சேர்ந்து வீரனுக்கு விற்பனை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. குடும்ப கஷ்டம் காரணமாக வீரனுக்கு அப்போது சொத்தை விற்பனை செய்தது உண்மை தான். அது வேறு சொத்து சம்பந்தப்பட்டது. தற்போது உள்ள சொத்துக்கான விபரம் கிரையம் செய்த விபரமே எங்களுக்கு தெரியாது. மேற்படி கஷ்டத்திற்காக விற்பனை செய்ததாக சொல்லும் சொத்திற்கான சர்வே எண் எனக்கு நினைவில்லை. சாட்சியிடம் பட்டா எண்.1445 மணப்பச்சேரி கிராமத்திற்குரிய ஆவணம் காட்டப்பட்டது சாட்சி தனக்கு கண்பார்வை சரியில்லை என்று பார்க்க மறுத்துவிட்டார். அதில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் படித்து

காண்பிக்கப்பட்டு, அது என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்று சாட்சி குறிப்பிடுகிறார். ஆனால் என் சகோதரிகள், என்னையும் சேர்க்காமல் என் தாயாரும், சின்னையாவும் மட்டுமே அமுதாவிற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். அதற்குரிய பட்டா தான் 1445 ஆகும். அமுதாவிற்கு விற்பனை செய்தர சொத்துக்கான சர்வே எண் எனக்கு தெரியாது. வீரனுக்கு விற்பனை செய்ததாக சொல்லப்படும் சொத்திற்கான சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

(சாட்சி வேண்டுகோளுக்கிணங்க வழக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.13 22:19:29 +0530

Sub Judge

Melur